பதினைப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

ஸ்ரீ விரோதி௵ (1889)
ஆவணி௴ உ௨
ஆரம்பமானது

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,,	ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி: ,,	ரூ. 9-40
தனிப்பிரதி:	சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ஙஎ. } யாழ்ப்பாணம்:—குரோதன௵ சித்திரைமீ உ௰க; (1925 மே 4) திங்கட்கிழமை { இலக்கம்—அரு.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டிவெள்ளியிலும் 1-ம் கெ. 2-ம் கெ. வெள்ளியிலும் மிச்சம் நுட்பமாக வேலைமுடித்த முருகுத்தி கெல்காதரக்கொடி கைகோர்வை, முகப்புகொடி, காஞ்சி அரணுக்கொடி, கால் தண்டை, சொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல்தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதாவெள்ளி தங்க நகைகளும் பட்டு பருத்தி முதலிய ஜவுளி தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வெ. செனனிசெட்டி & சன்ஸ்
சராப், ஜவுளி வியாபாரம்
(H. 31.) குகை சேலம் தென் இந்தியா.

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

AWARDED IST CLASS GOLD MEDAL TO C. MALAYAPPA SAMI PILLAI PALNI
BY THE TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION MADRAS 1923
BY THE TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION HELD IN MADRAS 1923

உலகம்
புகழ்வது.

உள்ளநாளும்
மறவாதது.

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

பழனி, சி. எம். சாமி

குரு தாம்பர பஸ்பம்.

மேப்புளினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புக்கள், கிரந்திகள், பத்துக்கள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர், முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூ 40. 40 வேளை மருந்து ரூ. 20. 20 வேளை மருந்து ரூ. 10.
ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்

நற்சாட்சி:—நிரேகமெல்லாமிருந்த மேகப் பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கை, கால் விரல்களி லிருந்த ஆறுத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. மூக வசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிபிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி

தங்கள் தாம்பிரபஸ்பம் 64-வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்டரோகம் குணமாயிற்று. சரீரத்திலுள்ள மேகநீர்கள் நீங்கி பாதத்தின்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்தகுன்மம்) 6-வேளையில் குணமாயிற்று. இன்னும் 80-வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி. நாராயணசாமிப்பிள்ளை, சப் போஸ்ட்மாஸ்டர், சர்ச்சில் ரோடு, இரங்கூன்; 4-11-24

☞ வீரியவிர்த்திக்கு நிகரற்ற

மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. பி. மு. இப்ராம்ஸா 3-1-23-ல் எழுதுகிறார்:
தங்கள் மன்மதகோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்புத்தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
C. மலையப்பசாமி பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி, S I.

9-10 A)

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*South Arcot District*).

ஏ ஜ ன் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உத்தரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய கலைகளை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிருகிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய கலைகளைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காக இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேலூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது மேற்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இதுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலவதுமுன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

(Y. 38).

ஒரு சாதாரண பொருளே.

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங் குணம் மறைந்துவிடுகிறது.

லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம். அதனால் அது உடனே சில்வாயு, தடைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு, முதலிய நோவுகளைத் திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—L—25.



Y. 41 B.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதனஸு
சித்திரைமீ உஉ௳ திங்கட்கிழமை.

குரூர விபத்துக்கள்.

குரோதன அக்ஷய என்னும் இருவருடமும் அதிக ஆபத்தான காலமெனப் பெரியோரும் காலங்கண்ட முதியோரும் கூறுகின்றனர். இவ்வருடத்துச் சித்திரைமாதம் பூர்த்தியாவதன்முன் அநேக குரூரசம்பவங்கள் இங்கும் மற்றெங்கெங்கும் நிகழ்வவாயின. மழையினால் அதிக சேதம் உண்டாயது. நெருப்பினாலும் அதிக விபத்துக்கள் நேருகின்றன. சில வருடங்களுக்கொருதரம் ஒருவர், இருவர் இடியினால் மாண்டார்களெனக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இந்தச் சித்திரை மாதம் முடிவதன் முன் இலங்கையின் பல பாகங்களிலும் அநேகர் இடியினால் மாண்டனர்; அநேக மரங்களும் சிற்சில வீடுகளும் அழிந்தன வருடத்தில் ஒருமுறை இருமுறை சிற்சிலவிடங்களிலே ஒருவரை யொருவர் ஏதுங் குரோதங்காரணமாகக் கொலை செய்தமையை அறிவோம். இப்பொழுது சோடு சோடாகவும் கூட்டம் கூட்டமாகவும் பலர் ஒரே முறையிற் கொலையுறுகின்றனர். கிணற்றுள் வீழ்ந்து இறத்தல் தூங்கி இறத்தல் முதலிய தற்கொலைகள் அதிகரிக்கின்றன. அவைகள்தாமும் கூட்டம் கூட்டமாகவே நிகழ்கின்றன. சிறுபிள்ளைக் கொலையும் அதிகமாக நிகழ்வதாயிற்று. முன் பெரிய கலகங்கள் நிகழ்ந்தபோதிலும் சீவமோசம்நேருவது குறைவாகவே யிருந்தது. இப்பொழுதோ கலகம் எவ்வளவு சிறிதாயிருப்பினும் சீவமோசங்கள் பாரதூரமாய் நடைபெற்றுவிடுகின்றன. ஆயுர் வேதத்திற் சொல்லப்படாதனவும், வைத்தியருடைய அனுபவத்திற் கெட்டாதனவுமான புதியநோய்கள் இக்காலத்தில் நூதனமாக உற்பத்தியாகின்றன.

களவு விஷயமாகக்கூறுகில் முன்னொருபோதும் நடைபெறாத குரூரச் செயல்கள் இங்குப் புகுந்தன. இந்தியாவிலே கொள்ளைக் கூட்டத்தார் கன்னமிட்டும் ஓடுகின்ற புகைரதத்தைத் தடுத்தும் இடையிடையே கொள்ளையிடுவதைக் கேட்டிருக்கின்றோம். இவ்வித கூட்டம் முன்னொருபோதும் இங்கு இருந்ததில்லை. இப்பொழுது கொள்ளையிடுவோர் தீவர்த்தியுடனும் ஆயுதங்களுடனும் கூட்டங் கூட்டமாக இலங்கையின் பல பாகங்களிலும் கொள்ளையிடத் தலைப்பட்டனர். அவர்கள் தனவந்தர்களுடைய வீடுகளையும் வியாபாரிகளின் கடைகளையுங் கொள்ளையிடுகின்றனர்; அங்குள்ளவர்களைப் படுகாயமுற அடித்தும், தூண்களுடன் கட்டியும், கொன்றும், சிறுபிள்ளைகளை நிலத்தில் மோதியும், துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தும் திருடத் தலைப்பட்டுக் கொண்டனர். வஞ்சனை, சூது, பொய், அழுக்காறு முதலிய தீயகுணங்கள் அதிகப்படுகின்றன.

எனவே, அதிக ஆபத்துக்களை விளைக்கும் ஒருகாலம் இப்பொழுது எமக்குக் குறுகிடுகின்றது அத்துடன் கொடிய பஞ்சமும் உண்டாகுமென்று பெரியோர் கூறுகின்றனர். தென்னிந்தியாவில் அரிசிப்பஞ்சம் சிறிது சிறிதாக அதிகரிப்பதும் ஓர் அறிகுறியாகும். நாம் ஒவ்வொருவரும் சதா கடவுளைத் தியானித்துக்கொண்டும், எவர்களோடும் சமாதானமுற்றும் அதிக சாவதானமாயும் இக்காலத்தில் நடந்துகொள்ளுதல் வேண்டும். எமக்கு எத்துணை அதிகாரம் இருந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தவொண்ணாது. "வித்தாரமும் கடம்பும் வேண்டா மட நெஞ்சே, செத்தாரைப் போலே திரி" என்ற ஆன்றோர் வாக்கியம் இக்காலத்திலேயே பெரும்பான்மையும் அநுசரிக்கத்தக்கது. இவ்வித விபத்துக்களையுடைய இக்காலத்தை நாம் திருவருளை முன்னிட்டே கடத்தல்வேண்டும்.

காலனை உதைத்துப் பாலனைக் காத்தமை.

[சச்சிதானந்தராஜயோகிகள் வண்ணைநகர் வைத்தியேஸ்வரசுவாமிகோவிலிற் செய்த மார்க்கண்டேயர் சரித்திரம் ஆறுநாட்பிரசங்கம்.]

திரிபுரங்களை எரித்தருளிய சிவபிரான் மிருகண்டு முனிவருக்குக் காட்சிகொடுத்தருளும் பொருட்டு அவர்முன் பிரசன்னமாயினர். தவசிரேட்டராகிய அம்முனிவரும் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிப் போற்றுவாராயினர். கயிலாயபதி தமது மெய்யன்பரிடம் கிருபாநோக்கஞ் செய்தருளிக் "குழந்தாய், உனக்கு வேண்டுவது யாது" என்னலும், "அடியேன் புத்திரப்பேற்றை வேண்டி நிற்கின்றேன்" என மிருகண்டு முனிவர் குறையிரந்தனர். இம் முறையீட்டைக் கேட்டருளிய சிவபிரான் "தவசிரேஷ்டனே, தீய குணங்கள் எல்லாம் பொருந்தப்பெற்றும், மெய்யுணர்வு சிறிதுமில்லாமல் நூறுவருடப் பூரண ஆயுள்பெற்றும், அந்த நூற்றாண்டிலும் தீராப்பிணியைப் பெற்றுமுள்ள ஓர் புத்திரன் வேண்டுமோ; அல்லது அங்கக் குறைவு சிறிதுமில்லாமலும், ஏதொருவித நோயில்லாமலும், பல கலைக்ஞானங்களையுங் கற்று மிக்க சாமர்த்தியமுடையனும், எம்மிடத்தில் மெய்யன்புடையனும், பதினாறுவயதுடையனுமுள்ள ஓர் புத்திரன் வேண்டுமோ" என வினவியருளினர். முனிவர் சிறிதுவேளை சிந்தித்தபின் "எம்பெருமானே, ஆயுள் குறைவாகவிருந்தாலும் நல்ல அறிவுடையவனும் அங்கக் குறைவில்லாதவனும், தேவரீரிடத்துப் பேரன்புடையவனுமுள்ள ஓர் சற்புத்திரனையே தந்தருளவேண்டு" மெனப் பிரார்த்தித்தனர். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்ல பிற" என்றமையினால் அவர் இருமையின்பமும் பயக்கும் சற்புத்திரப்பேற்றையே வேண்டினர். அங்ஙனமின்றிப் பூரண ஆயுளும், நீங்காப் பிணியும் துர்க் குணங்களும் நிறைந்துள்ள "கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி யெச்சமற் றேமாந்திருக்கை நன்றே." கயிலாயபதி அவரது அன்பின் மிகுதியையும் நுண்ணிய அறிவையும் கண்டு "முனிவனே நீ விரும்பியபிரகாரம் பதினாறுவயதுள்ள ஓர் சற்புத்திரனைக் கொடுத்தேம்" எனத் திருவாய்மலர்ந்தருளித் திருவுருக் கரந்தனர். மிருகண்டு முனிவரும் அந்தக் காசியம்பதியிலே தமதுறவினருடன் சிலநாட் டங்கியிருந்தார்.

இங்ஙன மங்கு வாழுநாளில் பூவுலகிலுள்ள தீயசெயல்கள் நீங்கவும், குற்றமில்லாத தருமங்கள் விருத்தி யெய்தவும், அரிய தவத்தைச்செய்யும் முனிவர் ஈடேறவும், எமது சைவ சமயம் பெருவாழ்வடையவும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானுடைய திருவருளினால் யமன் இறக்கவும் ஏற்ற ஒருகருப்பம் அந்த மிருகண்டு முனிவரின் தேவியாகிய மருத்துவதியின் திருவயிற்றிலே தங்கியது. முனிவர் பெருமகிழ்ச்சியெய்தினர். அவர் அங்குறையும் சிவனடியார்கள் விரும்பியவண்ணம் அன்ன தானம் வஸ்திர தானம் சொர்ண தானம் முதலியவற்றைச் செய்தார்; பும்ஸவனம் சீமந்தம் முதலான கிரிகைகளை யெல்லாம் வேண்டிய காலங்களில் விதிப்படி செய்தார். இவற்றைப் போதிக்கும் ஆசிரியரும் விரும்பிக் கற்கும் மாணவரு மில்லாமையினாலும், விபரீதத்தை விளைப்பதும் மெய்யுணர்வைக் கெடுப்பதுமாகிய நவீனக்கல்வி இக்காலத்தில் இங்கு ஊட்டப் படுகின்றமையினாலும் மேலே சொல்லப்பட்ட கிரியைகளெல்லாங் குறைந்து தேய்ந்தன. இவற்றின் பெறுபேறாகவே இக்காலத்திற் சற்புத்திரப் பேறும் இல்லாதொழிந்த தெனலாம்.

மருத்துவதித்தேவி பத்து மாதமும் நிறையப்பெற்றுப் பூரண கருப்பமுடையளாயினள். அப்பெண்மணி வாரம் திதி கரணம் யோகம் முதலியன வெல்லாஞ்சிறந்துள்ள சுபமுகூர்த்தத்திலே ஓர் சற்புத்திரரைப் பெற்றனள். தேவர்களும் முனிவர்களும் ஆரவாரித்தனர். காசியிலுள்ளாரும் ஏனையோரும் பெருமகிழ்வெய்தினர். பிதாவாகிய மிருகண்டு முனிவர் தாம்செய்யவேண்டிய கடன்களையெல்லாம் இனிது முடித்தார். அப்பொழுது பிரமதேவர் அங்குச் சென்று அப்புத்திரருக்கு மார்க்கண்டனென நாமகரணஞ் செய்தனர். முதலாம் வருடத்திற் சௌளமும் இரண்டாம்வருடத்திற் கர்ணவேதனமும் ஐந்தாமாண்டில் வித்தியாரம்பமும் நடைபெற்றன. கற்கவேண்டிய கலைஞானங்களையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றார். அக் கலைக்ஞானங்க ளெல்லாம் சிவபெருமானே முழுமுதற்கடவுளென்றும், அவர் ஆதியும் அந்தமுமில்லாது என்றுமுள்ளவரென்றும், அவரது திருவடிநீழலை அடைதலே பிறவிப் பெரும்பயனென்றும் அவருக்கு விளக்கிக்காட்டின. ஆகவே மார்க்கண்டேயரென்னும் அச்சற்புத்திரர் தாம் கற்ற நூல்கள் போதித்த வண்ணம் சிவபெருமானைநோக்கித் தவஞ்செய்யவேண்டுமெனப் பெருவிருப்புற்றார். அவர் தமது ஐங்குரவர்களுடைய பாதங்களில்வீழ்ந்து வணங்கி அவர்களுடைய ஆசிபெற்று ஆச்சிரமம் நான்கனுள் முதலாவதாகிய பிரமச்சரியத்தை விதிப்படி அநுஷ்டிப்பாராயினர். பதினாறு வயது ஆரம்பமாயது.

மிருகண்டியர் மருத்துவதி என்னுமிருவருக்கும் தங்கள் புத்திரன் இறக்குங்காலம் சமீபித்ததினால் வியாகுல முண்டாகி நாள்தோறும் அதிகரிக்கத்தொடங்கியது. அவர்கள் துக்கசாகரத்தில் மூழ்கினார்கள். இதனைக் குறிப்பாலுணர்ந்த மார்க்கண்டேயர் தமதுபெற்றோருடைய பாதங்களை வணங்கி "நீங்கள் யாது காரணத்தால் மனம் வருந்தி அழுகின்றீர்கள்" என்றார். அவர்கள் "எமது தவச்செல்வமே, உனக்குச் சிவபெருமான்கொடுத்தருளிய பதினாறுவயது முடியுங்காலம் சமீபிக்கின்றமையினால் வருந்துகின்றோ" மென்றனர். இதனைக் கேட்ட தவச் சிறுவர் "எனது அருமைத் தாய் தந்தையரே, யான் யமன் கையிற் சிக்குவேனென்று நீங்கள் சிறிதுஞ் சந்தேகங் கொள்ளாதீர்கள். பரமகருணாநிதியும் ஆன்மநாதருமாகிய சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து, எனது உயிரைக் கவர வரும் அந்த யமனுடைய வலியைச் சிதைத்து நும்பாலடைவேன், இப்பொழுதே எனக்கு விடைகொடுக்குதிர்" என வேண்டினர். இந்த மங்கலமொழிகேட்ட தாயுந் தந்தையும் தமது புத்திரரைக் கட்டித் தழுவி உச்சிமோந்து ஆசிகூறி விடைகொடுத்தனர். மார்க்கண்டேயர் மணிகர்ணிகைக்குச் சென்று அதன் தென்பாகத்திலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அப்பெருமானை இடையறாது பூசை செய்வாராயினர்.

சற்குருவாயிலாகக் கற்றுக்கொண்ட கல்வியும் மந்திரோபதேசங்களும், அநுஷ்டானங்களும், அநுபவங்களும் சிவபூசை புரிவோர் யமன்கையிற் சிக்கமாட்டார்களென்பதை அவருக்கு விளக்கிக்காட்டின. "குமரேசர் இருதாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளுங் கடம்பும் எனக்கு முன்னே வந்துதோன்றிடின்" "நாளென்செயும்; வினைதானென்செயும்; நம்மைநாடிவந்த கோள் என்செய்யும்; கொடுங்கூற்று என்செயும்" என்பது முதலான வாக்கியங்களாலும் இது இனிது புலப்படும். இங்ஙனம் மார்க்கண்டேயர் அன்புருவாக அரனை அருச்சித்து ஏத்துதலும் பத்தி வலையிற்படுபவராகிய சிவபெருமான் அப்பாலர்முன் பிரசன்னமாயினர். முனிவர் கயிலாயபதியின் திருவடிகளில் அடியற்ற மரம்போல வீழ்ந்து "ஐயனே, அமலனே, அனைத்துமாகிய மெய்யனே, பரமனே, விமலனே, அழற்கையனே, கடையேன் அந்தக் கொடிய யமன் கையில் அகப்படாவண்ணம் காத்து அருள்புரிய வேண்டு"மென்று குறையிரந்து நின்றனர். அவருடைய பத்தித்திறனைக் கண்டு எமது ஆன்மரக்ஷகராகிய சிவபெருமான் அம்முனிவரைத் தமது அருமைத் திருக்கரங்களாற் றூக்கி எடுத்து மார்புறத் தழுவி உச்சிமோந்து "அருமைக் குழந்தாய், நீ ஒன்றுக்கும் அஞ்சாதே! அஞ்சாதே!!" எனத் திருவாய்மலர்ந்தருளி, ஞானசத்தி கிரியாசத்தி யென்னும் தமது திருவடிகளை அவரது சிரசின்மீது வைத்துப் பாத முத்திரை செய்தபின் மறைந்தருளினர். மார்க்கண்டேயரும் "இனி நாம் யமன் கையிலகப்படாது தப்பினோம்" எனக் கூறி ஆனந்தமடைந்து, இடையறாச் சிவத்தியானத்துடன் அங்கு வீற்றிருந்து சிவபூசை புரிவாராயினர்.

இங்ஙனம் மார்க்கண்டேயர் சிவபிரானுடைய பூரண அநுக்கிரகத்தைப் பெற்றுச் சிலநாட் கழிதலும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுட் காலம் முழுவதும் நீங்கின. பூர்வத்திற் செய்துகொண்ட பாவபுண்ணியத்தை அநுபவிக்கும் பொருட்டு வினைப்போகமாயுள்ள தேகம் அந்த வினை ஒழிந்தவுடன் நீங்கவேண்டியதாகும். அவ்வாறு நீங்கும் அத்தருணஞ் சிறிதும் தப்பாவண்ணம் அவருடைய உயிரைக் கவருதற்கு ஒரு யமதூதன் அதிவிரைவில் அங்கு எய்தினன். அவன், மார்க்கண்டேயர் விபூதி உருத்திராக்கம் முதலிய சின்னங்களைப் பூண்டு சிவபூசை இயற்றுவதைக் கண்ணாரக் கண்டு தரிசித்து அவர் பக்கலைத்தானும் அடைய அஞ்சினவனாய் மீண்டுச் சென்று தன் எசமானாகிய யமனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி "மகாராசாவே, அடியேன் மார்க்கண்டனுடைய உயிரைக் கவரும் பொருட்டுப் பூவுலகுக்குச் சென்றேன். அச்சிறுவன் சிவபெருமானிடத்துப் பதிந்த சித்தையுடையன்; அப்பெருமானுடைய பாத முத்திரை தரித்த சிரசையுடையன்; கயிலாயபதியை இடையீடின்றிப் போற்றும் விரதமுடையன்; சிவபூசா துரந்தரன்; தூயசிந்தை யுடையன்; சிவஞானச் செல்வத்தையுடையன்; ஸ்ரீ காசி என்னும் உத்தம சிவ க்ஷேத்திரத்தி லிருக்கின்றனன்; சிவபெருமானுடைய திருவடியைப் புகலிடமாகக்கொண்டு உறைகின்றனன். அவனைச் சமீபிக்கத்தானும் அடியேன் அஞ்சினேன். என்குற்றத்தைப் பொறுத்தருளும் வண்ணம் பிரார்த்திக்கின்றேன்" என்றான்.

இதனைக் கேட்ட யமன் கடுஞ்சின முற்றான். அவன் கண்கள் சிவந்தன; நெட்டுயிர்த்தான். "அந்தச் சின்னஞ்சிறு பாலகனாகிய மார்க்கண்டன் ஒருபோதும் அழிவில்லாத சிவபெருமானோ" எனச் சிறிதும் பொருட்படுத்தாது கூறி ஆர்ப்பரித்தான். அவன் தன் அதிகாரத்தின் கீழுள்ள சித்திரகுப்தன் என்னும் கணக்கரை விரைவில் அழைத்துவரும்படி அங்கு நின்ற தூதருக்குக் கட்டளையிட்டனன். (வரும்.)

நமது பத்திரிகாபிமானிகட்கு ஒரு விசேஷ விஞ்ஞாபனம்.

அபிமானம்பூண்ட அன்பர்காள்,

இந்துசாதன ஆங்கில 'தமிழ்ப் பிரசுரங்களின் பொருட்டுத் தங்களால் வரவேண்டிய கிரயத்தை அறவிடுதற்கும், பத்திரிகாபிமானிகளைப் புதிதாகச் சேர்ப்பதற்கும் அதிகாரங் கொடுத்து நமதுஇந்துசாதனப் பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களையனுப்புகின்றோம். இவர் கொழும்பு, காலி, கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி, குருணாக்கல், அனுராசபுரம் முதலிய இடங்கட்குச் செல்வர். பத்திரிகாபிமானிகளாயுள்ள நீவிரனைவரும், அவர் உங்களிடம் வருஞ்சமையத்தில் உங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தை முற்றாகக் கொடுத்து அவர் தரும் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்வதுடன் புதிய அபிமானிகளையுஞ் சேர்த்துக்கொடுத்து இன்னும் ஆகவேண்டிய வசதிகளையுஞ் செய்வீர்களென எதிர்பார்த்திருக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்
ச. அம்பிகைபாகன்
9-4-25. மானேசர்.

சமாசாரம்.

காலநிலை.

சென்ற இரவு சிறுமழைபெய்தது. இன்னும் மழைக்கோலம் காணப்படுகின்றது.

நீர்வேலிக் கந்தசுவாமிகோவில் இரதோற்சவம்.

இத்தமாதம் 25-ந்௳ (7-5-25) வியாழக்கிழமை ஷை ஆலய இரதோற்சவமும் 26-ந்௳ வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

உரும்பராய்ச்சைவ ஆங்கிலவித்தியாசாலைப் புதியகட்டடம்.

இத்தமாதம் 24-ந்திகதி (6-5-25) புதன்கிழமை காலை ஏழுமணியளவில் கௌரவ ஸ்ரீ வை. துரைசுவாமியவர்களால் ஷை வித்தியாலயக்கட்டட அஸ்திபாரமிடப்படும்.

உற்சவப்பிரசங்கம்.

சென்ற சனிக்கிழமை இரவு சச்சிதானந்த ராஜயோகிகள் அராலிமேற்கிலுள்ள விநாயகர் ஆலயத்திலே மதுரைச்சோமசுந்தரக்கடவுள் கௌரி என்னும் பெண்மணிக்காக விருத்தகுமார பாலரான சரித்திரத்தைப் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கம் செய்தார்கள்.

வலம்புரிச்சங்கு.

சென்ற எப்பிரல்மீ 28௳ பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த மருதங்கேணிக் கடற்கரையிலிருந்து இரு வலம்புரிச் சங்குகள் அதன்பக்கத்துள்ள வீட்டு வாயிலில் இரைச்சலுடன் சென்றனவென்றும், அவற்றுள் ஒன்று மறுநாள் இறந்ததென்றும், மற்றது உயிருடனிருக்கிறதென்றும் அங்குள்ள நிருபர் ஒருவர்தெரிவிக்கின்றார்.

தவறலையை நீக்கும் ஒழுங்கு.

ஒவ்வொரு பகுதியிலும் தவறலை நீக்குதற்குச் சம்மதஞ் சொல்லுவோரின் இடாப்பு ஏப்பிரல்மாத ஆரம்பத்திற்குமுன் வெளியிடப்படும். மேமீ 15-ந் திகதிக்குமுன் அவ்விடாப்பிலே திருத்தங்கள் செய்துகொள்ளவேண்டும். கடையாணைக்கு ஆனிமீ 15௳ வெளியிடப்படும். ஆவணிமீ 31-ந் திகதிக்குமுன் தவறலை நீக்குதற்கு மனுச்செய்தல்வேண்டும். நவம்பர்மீ 1-ந் திகதிக்கும் டிசெம்பர்மீ 15-ந் திகதிக்குமிடையிற் சம்மதம் பெறப்படும். சம்மதஞ் செ லுத்திகதிகள் சொல்லவேண்டிய தினத் 20நாளைக்குமுன் தெரிவிக்கப்படும்.

கிளோறிக்கல் பரீக்ஷை.

இப்பரீக்ஷைக்கு இம்முறை சென்றவர்களின் தொகை 1050. அரசாட்சியாருக்கு வேண்டியவர்கள் முப்பதின்மர். மற்றை 1020 பேரும் உத்தியோகமில்லா வகுப்பாருள் (Unemployment) சேர்க்கப்படுவர். இப்பரீக்ஷைக்குச்செல்பவர்களால் அரசினர்க்கு வருமானம் அதிகப்படுகின்றது. எத்தனையோபேர் ஏமாறுகின்றனர். இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்தினால் எத்தனையோ பிள்ளைகளுக்கு அதிக வசதியாகும். யாழ்ப்பாணத்திலிருந்து பரீக்ஷைக்குப்போகும் பிள்ளைகளால் வரும் வருமானம் பரீட்சையை இங்கு நடாத்துதற்கு வேண்டிய செலவினும் பன்மடங்கு அதிகமாகும். நம்மூர்த் தலைவர்கள் இவ்விஷயத்திற் சிறிது கடாக்ஷம் வைப்பரேல் அநேக பெற்றோருடையவும் பிள்ளைகளுடையவும் ஆசீர்வாதத்தைப் பெறுவர்.

வெள்ளவத்தைத் திருக்குறட்பயிற்சிக் கழகம்.

இந்தமாதம் ஏழாந்திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாவுக்கரசுநாயனார் குருபூசை ஷை கழகத்தாரால் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது. தேவாரதிருவாசகபாராயணமும் நாயனார் சரித்திரப்பிரசங்கமும் நன்குநடைபெற்றன.

இடிவிபத்து.

சென்ற ஏப்பிரல்மீ 28-ந்உ மாதம்பிட்டிக் கணித்தாயுள்ள ஒருகிராமத்திலே கடற்கரையோரமாகச் சென்ற இருவர் இடியினாலே தாக்குண்டனர். ஒருவர் உடனே இறந்தனர். மற்றவர் ஆபத்தான நிலையிலே வைத்திய சாலையிற் கிடக்கின்றனர். அயலிலுள்ள தென்னமரங்கள் பல எரிந்தன.

மிஸ்ரர் குணவர்த்தன புத்தகயாவைப்பற்றிச் சொல்வது.

புத்தர்கள் புத்தகயாவை இந்துக்களிடமிருந்து பெறுவதற்குமுன் இந்துக்களுக்குரிய அதிகாரத்தை அவர்கள்வசம் ஒப்புவிக்கவேண்டுமென்றும், அவர்கள் தங்களுக்குள்ளிருக்கும் சாதிவித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமென்றும், இந்த இரண்டு கருமங்களையும் நிறைவேற்றுவதன்முன் புத்தகயாவைப்பெற நினைப்பது வீணாகுமென்றும் முதலியார் குணவர்த்தன கூறியிருக்கின்றார்.

தென்னமரங்களுக்கு மாரகம்.

நளம்புகள் விருத்தியாவதற்கு முக்கியகாரணம் தென்னமரங்களென்று சாஸ்திரவிற்பன்னர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்களாம். ஆதலினால், குடியிருக்குமிடங்களிலுள்ள தென்னைகளையெல்லாம் தறித்துவிடவேண்டுமென்றும் இனிமேல் தென்னைகளைக் குடியிருக்குமிடங்களில் நடாமல் தடுக்கவேண்டுமென்றும் சட்டம் செய்யப்போகிறார்கள். சுகாதாரசங்க அக்கிராசனரும் சுகாதாரவைத்திய உத்தியோகத்தரும் இந்நிர்ணயத்தை ஆமோதிக்கின்றார்கள்.

மகமதிய உத்தியோகத்தர்.

இலங்கையிலுள்ள மகமதியர் தமது வணக்கத்தின்பொருட்டு வெள்ளிக்கிழமைதோறும் ஒருமணிநேரவிடுதலை உதவப்படவேண்டுமென அரசினருக்கு மனுச்செய்தமையினால் அம்மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெள்ளிக்கிழமைகளிற் பகற் பன்னிரண்டரைமணிதொடக்கம் ஒன்றரைமணிவரையுமுள்ள காலம் அவர்களுக்கு விடுமுறையாகுமென்றும், அதற்காக அவர்கள் அடுத்த இருதினங்களிலும் அரைமணிநேரவிகிதம் மேலதிகமாக வேலைசெய்யவேண்டுமெனவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

கள்வர் கூட்டத்தின் அக்கிரமம்.

சென்ற ஏப்பிரல்மீ 24-ந்உ இரவு குருநாக்கலைச் சேர்ந்த பெய்மா என்னுமிடத்துக்குச் சமீபமாயுள்ள ஒருகிராமத்திலே ஒருவீட்டினுட் கள்வர் கூட்டம் ஒன்றுபிரவேசித்தது. அவ்வீட்டில் கிறிஸ்தியன் என்னுமொருவரும் அவர் மனைவியும் மூன்றுவயதக் குழந்தையும் வசித்தனர். கள்வரிற் பன்னிரண்டுபேர் அவர்களிருந்த அறைக்குச்சென்று தங்கள் கைகளிலுள்ள தடிகளினால் இருவரையும் தாக்கினர். ஒருகள்வன் அக்குழந்தையைத் தூக்கி நிலத்தில் மோதினான். அரவங்கேட்டு அங்குச்சென்ற உறவினன் ஒருவன் வெளியே காவல்புரிந்துநின்ற இருகள்வராற்படுகாயமுறத் தாக்கப்பட்டு மூர்ச்சையாகி நிலத்தில்வீழ்ந்தனன். கள்வர் அங்கிருந்து 2600 ரூபாபெறுமதியான நகைகளையும் பிறவற்றையும் திருடிக்கொண்டுமறைந்தார்கள். இவ்வகையான களவுகள் இப்பொழுது இலங்கையிற் பல விடங்களில் நடப்பதைக் கண்டு பொலீசர் ஆச்சரியப்படவில்லையா?

ஜெர்மனிய பிரசாதிபதி.

சமீபத்தில் நடைபெற்ற பிரசாதிபதித் தெரிவில் ஜெர்மனிய சக்கரவர்த்தியாக இருந்த கெய்ஸரின் இராணுவத்தலைவராகும் ஹெறான்கின்டன்பேர்க் அவர்கள் குடியரசுத்தலைவராயினர். இவர் பிரசாதிபதியானமைபற்றி ஜெர்மனி மகிழ்ச்சியடைகின்றது. அங்குள்ள பொதுஜனங்கள் பின்னரும் கெய்சரைச் சிங்காசனத்தில் அமர்த்த விரும்புகிறார்களெனச் சொல்லப்படுகின்றது. இந்த விஷயமாக பிரான்சு முதலிய அயல்நாடுகள் சிறிது நிலைகுலைகின்றன. அயல்நாட்டுப் பத்திரிகைகள் கலக்கமடைந்து வியாசங்களை வரைகின்றன. இங்கிலாந்தும் இத்தெரிவு விஷயமாகத் திருப்தியடையவில்லை. ஜெர்மனி பின்னரும் இராணுவப்பலங்கொண்டு தலையெடுக்குமாயின் ஐரோப்பாவிற் சமாதானம் குன்றுமென்பதே இக்கலக்கத்தின் காரணமாகும்.

மாணவர் மகாநாடு.

இச்சங்கத்தின் இரண்டாவது கூட்டம் சென்ற திங்கள் செவ்வாய் புதன்கிழமை என்னும் மூன்றுநாளும் திரிமலையில் வயித்தியலிங்கமவர்களின் மடத்தில் நடைபெற்றது. இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து அநேகர் சமுகமளித்திருந்தனர். கூட்டம் ஈசுவரதியானத்தோடு தொடக்கப்பட்டது. கொழும்பு ஆனந்தக்கல்லூரிப் பிரதமாசிரியர் மிஸ்டர். குலரத்தினம் அவர்கள், இம்மகாநாட்டின் நோக்கங்களை விஸ்தரித்து ஒருமணிநேரம்வரையிற் பிரசங்கம் செய்தார். ஸ்ரீ. விபுலாநந்தசுவாமிகள், ஸ்ரீ முத்துக்குமாரு M. A ஸ்ரீ. தில்லைநாதன் பி. ஏ. Dr. சின்னையா, ஸ்ரீ. பாலசுந்தரம், ஸ்ரீ. தா. பொ. மாசிலாமணிப்பிள்ளை (தேசாபிமானிப்பத்திராதிபர்) பிறக்றர் ஸ்ரீ. க. ஐயாத்துரைபிரமஸ்ரீ. நவநீதகிருஷ்ணபாரதி ஐயர், ஸ்ரீ. சிவப்பிரகாசம். B. Sc. (இந்துக்கல்லூரி) மிஸ்டர் ஏ. எம். கெ குமாரசுவாமி (திறினிற்றிக்கல்லூரி கண்டி) ஸ்ரீ. குமாரசுவாமி எம். ஏ. (இந்துக்கல்லூரி) முதலியோர் உபந்நியாசம் செய்தனர். இரண்டாநாட் பிற்பகல், பிரசங்கங்கள் தமிழில் நடைபெற்றன. வருகிறவருடத்திற்குமிஸ்டர்குலரத்தினம் அவர்கள் B A B. Sc. L. L B. அக்கிராசனாதிபதியாகவும் ஸ்ரீ. சிதம்பரநாதன் அவர்கள் காரியாதிகாரியாகவும் ஸ்ரீ. தில்லைநாதன் அவர்கள் பொக்கிஷபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். இச்சங்கத்திற்சேர்ந்தோர் பிரசங்கித்தோர் என்னுமிவர்களுட் பெரும்பாலார் உபாத்தியாயர்களாகவேயிருக்கின்றனர், தமிழில் நடந்தபிரசங்கங்கள் ஒன்றையொன்று கண்டித்தனவாயிருந்தன. மாணவன்.

அநுபந்தம் பார்க்குக.

அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 6-ம் நம்பர் கசுக்கடைவீதி. மு. தாமோதரம்பிள்ளை. &. இராசலிங்கம் என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின்விபரம்.

1923ஆ 11-ம்மீ.

இல.	திகதி	ரு	ச.	நகைகளின்விபரம்.
788	1	12		செருகுதோடு சோடி 1
803	1	13		இதட்பூ 1
810	3	20		கற்தோடு சோடி 1
827	5	10		வெ. பழையகறணை சோடி1
839	5	6		தோடுசோடி 1 ச. இ.
853	6	15		பூசாந்திரமுடன் மணிக்கோர்வை 1க்கு மணி 12
855	6	80		நடு. பத. பூராணட்டியல் 1
956	13	18		சிறுபின் பூசாந்திரமுடன் மணி
969	14	7		சிறுமணிக்கோர்வை1 பி. இ.
1070	20	13		தங்ககாப்பு 1
1077	20	8		வெ. பீலிமயிலடி சோடி 1 வெ. சங்கிலித்துண்டு 1
1085	21	7	50	மேலீடு சோடி 1 கல் மூக்குத்தி 1
1107	23	13		பவுண்காப்பு 1
1154	26	13		கற்தோடு சோடி 1
1164	27	8		சிறுமணிக்கோர்வை1 பி இ.
1172	28	16		தோடுசோடி 1
1192	30	32		பூசாந்திரம் பின் உடன்மணி 4 சிறுமணிக்கோர்1 பி.இ.
1193	30	7		பூசாந்திரமுடன் மணி 19
12-ம்மீ.				
1200	1	17		பழைய சிறு பொன்தாலிக்கொடி 1
1207	1	50		பதபூராணட்டியல்1 க.மு வி.
1217	1	18		படக்கூர் 1 வெ. கொலிசு சோடி 1
1235	2	35	04	கற்தோடு சோடி 1
1239	3	18		சிறு சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 29
1254	4	8		வளையல் 6
1274	5	15		சிறு இதட்பூ1 கற்படக்கூர்1
1311	8	9		சிறுதங்கக்காப்பு 1 தோடு சோடி 1 உடையல்
1336	9	10		பொன்செருகுதோடு சோ.1
1343	10	10		படக்கூர் 1
1349	10	7		தோடுசோடி 1 ச இ.
1371	11	14		கற்தோடு சோடி 1
1403	13	10		பிரப்பமணி 25 வெ. குழற்காப்புச்சோடி 1 வெ. அவாக்கூடு சோடி 1
1409	13	9		சிறுதட்டுக் கிச்சி 1
1422	14	25		இதட்பூ 1 சவுக்க மணிக்கோர்வை1
1430	15	9		மோதிரம் 1
1441	16	18		சிகப்புக் கடுக்கன் சோடி 1 ச. இ. சிறு செருகுதோடு சோடி 1 ச. 1 இ.
1443	16	10		படக்கூர் 1
1460	16	25		கம்பிடம்பியுடன்பொன்சறடு1
1461	16	40	04	பழையதாலிக்கொடி 1
1467	17	7		பொன்தோடுசோடி 1 கலி.
1469	17	110	04	மணிக்கோவை1க்கு மணி32
1472	17	10		சவுக்கமணியும் பிரப்பமணியும் கலந்தகோர்வை 1 உ.
1487	17	40		தாலியுடன் பழைய தாலிக்கொடி 1
1520	20	75	04	டயன் 6
1587	24	10		முத்துமாண்டைமணிக்கோர்வை 1க்கு மணி 44
1598	25	18		கற்செருகுதோடு சோடி 1
1628	26	12		சிகப்புக்கடுக்கன் சோடி 1 ச. இ.
1630	26	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
1638	27	16		படம் 2 பொன்செருகுதோடு சோடி 1
1641	27	60		பொன்சறடு 1 பொன்பூராணட்டியல் 1
1690	30	35		கைச்சங்கிலி சோடி 1
1722	31	7		பொன் கொப்புச்சிமிக்கி சோடி 1
1725	31	12	04	சிறு தங்கக்காப்பு சோடி 1
1924ஆ தைமீ.				
1809	5	6	04	மேலீடுசோடி 1
1819	6	10		பதக்கம் 1
1865	8	16	54	படக்கூர் 1 வெ. கொலிசு சோடி 1
1936	12	70		பொன் சப்புகுத வளையல்4
1947	12	7		வெ. கறணை சோடி 1
1956	13	26		வெ. பாதசரம் சோடி 1
2041	19	11		பூசாந்திரம் 1 பழுது
2103	28	15		பத. சிறுசறடு 1
2129	31	6		சிறு இதட்பூ 1
2131	31	6		சிறு தங்கமோதிரம் 4
2-ம்மீ.				
2151	2	12		பதக்கம் 1 கல்விழு.
2166	3	14		பொன்மயிர்மாட்டிசோடி 1 மு. இ.
2178	4	8		மோதிரம் 1
2188	5	8		பூசாந்திரம்1, வெ. சிறுஅரைஞாண் 1, வெ வெட்டுக்காப்புசோடி 1
2202	6	22		வெ பாதசரம் சோடி 1
2223	9	6		படக்கூர் 2, அராதுப்பூ சோடி 1
2232	9	12	50	சிறு 2 பட்டுமணி 1 பி. இ. உடை.
2234	10	10		வெ. கறணை சோடி 1
2254	11	12		கல்மோதிரம் 1, படக்கூர் 1
2256	11	50		பூராணட்டியல் 1
2291	15	10		வெ. அடிக்குக்காப்பு சோ1
2294	15	8		வெ. சிறு அடிக்குக்காப்பு சோடி 1
2306	16	15		பழைய சற்றோடு சோடி 1
2323	18	18		அறுக்குத்து 12 ச. இ.
2324	18	7		தகட்டுடன் கூடு 1 பழுது
2340	20	100	4	ஐந்துபட்டிமாலை 1
2360	22	45		சிறு பீலிக் காப்புசோடி 1 ச. இ
2399	26	10		வெ. கொலிசு சோடி1 பழு.
2404	27	8	01	சிறுகிலுக்கு 2 வெ. அரைஞாண் 1 ச. இ. முறியல்
2414	28	6		சிறு இதட்பூ 1

விற்பனவு:— குரோதன ௵ வைகாசி மீ 4-ந் திகதிக்குச் சரியான 1925-ம்ஆ மேமீ 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்
வெந்திஸ்மேஸ்தர்,
திரிகோணமலை.

27—4—25
(Mis 639.)

காணி விற்பனவு விளம்பரம்.

காணிவாங்க விரும்பியவர்களுக்குத் தவறவிடக்கூடாத தருணம்.

தென்னந்தோட்டமும் வயல்களும்.

1. தென்மராட்சிப்பகுதி கைதடி நாவற்குளியில் வள்ளியம்மன் கோவில், முருகமூர்த்திகோவில்களிலிருந்து 3/8 கட்டைக்குள் றோட்டருகில் 30 பரப்புத்தென்னந்தோட்டம். வீடுகட்ட நல்ல இடம்; இளந்தென்னமரங்கள், நாவற்குளி ஸ்டேஷனிலிருந்து தனங்கிளப்புக்குப் போகும் றோட்டில் 2¾ கட்டையிலிருக்கிறது. வண்ணாத்தியான் பாலத்துக்குக்கிட்ட 2 மேற்குறித்த காணியருகில் 100 பரப்பு நல்ல நெற்காணி. இவைகளிரண்டும் வைகாசிமீ 28உ வியாழக்கிழமைசாயந்தரம்4-30 மணிக்கு அந்த இடத்திலும்,

3 வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக்கோவிற்பற்று சுளிபுரம் இறைபுன்னையில் 480 பரப்பு தென்னந்தோட்டம். தென்னையும் பனையுமிருக்கிறது. காய்க்கிற இளமரங்கள். சின்னப்பா அவர்களின் தோட்டத்திற்குமேற்கே. ஒரு புறம் கடற்கரை. வரடை சோளகம் இரண்டுகாலத்திற்கும் நல்ல சுகமான இடம். சுகத்திற்கு வங்களாக்கட்ட இதைப்போலிடங் கிடையாது.

இது ஆடிமீ 1உ புதன்கிழமை 4-30 மணிக்கு விக்டோறியாக்கொலீச்சிலும்.

4. வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று வல்வெட்டியில் விருச்சிவெளியில் தருக்த நெற்காணி 75 பரப்பு.

இது ஆனிமீ 1உ திங்கட்கிழமை 4-30 மணிக்கு அந்த இடத்திலும்.

இந்தக்காணிகள் முன் குறித்தநாட்களுக்குமுன் யாருக்கும் விற்கப்படாவிட்டால் குறித்த இடங்களிற் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

இதன் விபரம் தேவையானோர்,

ச. சுப்பிரமணியம்,
பிறக்கிராசியார்,
யாழ்ப்பாணம்.

ச. அப்பாத்துரை,
பிறக்கிராசியார்,
வல்வெட்டி.

அல்லது, வி. சண்முகலிங்கம்,
அளவுகாரன்.

வெந்திஸ்மேஸ்தர்வசம் பெற்றுக்கொள்ளலாம்.

(Mis. 640).

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வண்கிழக்கு செ. நா. செ சாமிநாதஞ் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1924ஆ பெவ்வரிமீ

நம்.	உ	ரூபா	ஊரும் பெயரும்	நகை விபரம்.
2269	14	50	வண்மேற்கு வே. செல்லையா,	பொன் கம்பிப்பூராணட்டியல் 1
2278	15	20	தாவடி அ. சிவகடாக்ஷ ஐயர்,	பொன் கம்பி 1, அரும்புத்தடை 2
2338	21	190	வயாவிளான் வ. அந்தோனிப்பிள்ளை,	பொன் தாலிக்கொடி 1
		மார்ச்சுமீ		
2426	1	17	நல்லூர் அ. சின்னையா,	சிகப்புக்கல் தோடு சோடி 1
2477	6	20	சண்டிக்குளி ஆ. வைத்தியலிங்கம்,	பொன்முகப்பில்லாத பிள்ளைக்காப்பு சோடி 1
,,	,,	,,		கம்பிப்பூராணட்டியல் 1
2484	7	20	கரையூர் சி. வயிரமுத்து,	கொட்டோலை சோடி 1
2488	7	43	சோனகதெரு மு சாகுல்மீது,	பொன் கம்பிப்பூராணட்டியல் 1
2489	7	45	,,	பொன் 1 பட்டு மணிக்கோர்வை 1
2516	9	520	சங்கானை சி. நாகமணி,	பொன் பிரன்சுக்காசு 60-ம் அமெரிக்கன் டலர் 1, கோத்தமாலை 1
2529	10	55	கொக்குவில் மு. நாகலிங்கம்,	பொன் பட்டணக்காப்பு சோடி 1
2531	10	175	வண்கிழக்கு வே. க. ராசரத்தினம்,	பொன் இரண்டுபட்டுக் குண்டுச்சங்கிலி 1 கைச்சங்கிலி சோடி 1
2535	10	160	சோனகதெரு மு. சேகுமுகம்மது,	பொன் பதக்கத்துடன் கெட்டிப்பூராணட்டியல் 1
2537	10	55	வண்கிழக்கு சி. கந்தையா,	பொன் பட்டணக்காப்பு சோடி 1
2546	11	50	சண்டிக்குளி ச. சவுரிமுத்து,	பொன் பட்டணக்காப்பு சோடி 1
2556	12	600	சங்கானை சி. நாகமணி,	வயிரக்கல் ஒவ்வொன்றுவைத்த தோடுசோடி 1

விற்பனவு:—குரோதன ௵ வைகாசிமீ 3-ந் திகதிக்குச்சரியான 1925ஆ மேமீ 16உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகீங்கலாக மிகுதி ஷை கடைத்திண்ணையில்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்கிழக்கு அரு செல்லையா உடையார்,
வெந்தின்மேஸ்தர்,

(Min. 642.)

படிக்கப் படிக்க இனிக்கும்!
நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

தமிழ்ப்பாஷையில் இவ்வளவு பூரணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை. இதில் ஸ்திரீ புருஷலக்ஷணங்களும், அவர்களது சரீர அமைப்பும், அவர்களின் நேர்மையான உபயோகங்களும், ரதிமன்மத சிருங்கார ரகசியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விவரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அவைதப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா நிபுணரால் மர்மமாக ஆதியில் எழுதிய இன்னும் இன்பங்களும் விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 படங்களுடன் சுமார் 200 பக்கங்களுடைய 4 ம் பதிப்பு புஸ்தகம் விலை ரூ 1 தபால் செலவு அணா 0—7—0

மாணிக்க விலாசம் பிரஸ்,
12, அருணாசல முதலி வீதி, சென்னை
(Q 62)

ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா' வைப்பற்றி என் அனுபவத்தைத் தெரிவிக்கின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறொன்றுமில்லையெனத் திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்துவந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டுமென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" ஞாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங்கொண்டவனாய் தந்திமூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றும்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினால் ஆபரேஷனில் தான் நிவிர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கினாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
(Y. 35. B) எழும்பூர், மதராஸ்

"ஸ்ரான்டேர்ட்"

கொழுக்கியோடுகள்:

(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள் மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள் நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள் உஷ்ணகாலங்களிற் குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்துவிற்றுவருகின்றோம். இந்தநாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரசத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
(H. 34.) யாழ்ப்பாணம்.

ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று

என்று திருவானைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினர்.

4 வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டை காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ரா" வின் உபயோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
Y. 35 A) எழும்பூர், மதராஸ்

இனாம்! விலை ஜாப்தா. இனாம்!!

பிரசித்திபெற்ற

மைசூர் ஊதுவத்திகள்.

தர்பார்வத்தி	சேர்1க்கு ரூ.10	முதல்	ரூ.24	வரை.
அம்பர்வத்தி	,, 3	,,	18	,,
கஸ்தூரிவத்தி	,, 4	,,	12	,,
பால்வத்தி	,, 8	,,	16	,,
ஜவ்வாதுவத்தி	,, 4	,,	10	,,
புனுகுவத்தி	,, 3	,,	6	,,
பன்னீர்வத்தி	,, 1	,,	4	,,
மத்தாப்புவத்தி	,, 1	,,	3	,,

மைசூர் வாசனை வில்லைகள்.

கஸ்தூரிவில்லை, கேசரிவில்லை, ஜவ்வாதுவில்லை, புனுகுவில்லை, புதுக்கோட்டைவில்லை, பச்சைவில்லை. கிரயம் வில்லை 1க்கு 0-8-0 முதல் 1-0-0, 1-8-0, 2-0-0, 2-8-0, 3-0-0, 4-0-0, 5-0-0 வரை.

அரகஜா

(ஜவ்வாதுகலந்த சந்தனம்.)

தோலா 1-க்கு ரூபா 2-0-0 முதல் ரூபா 3-8-0 வரை.

தசாங்கம்.

சேர் 1-க்கு ரூபா 1-8-0 முதல் ரூபா 2-0-0 வரை.

சுத்தமான சந்தன எண்ணெய்.

ஒரு அவுன்ஸ் பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0

"சந்தனமரத்தூள்"

பெரிய டப்பா 1-க்கு விலை ரூபா 3-0-0
சிறிய டப்பா 1க்கு விலை ரூபா 1-12-0

பன்னீர் (முதற்றரம்)

பெரிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 3-8-0
சிறிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0

"மைசூர் அத்தர் தினுசுகள்".

கஸ்தூரி, மல்லிகைப்பூ, தாழம்பூ, மருக்கொழுந்து, குலாபி, சண்பகப்பூ, இரா. மஸ்மா முதலிய அத்தர்கள் தோலா 1க்கு விலை ரூபா 5 முதல் 10, 12, 15, 20, 25 வரை.

தங்களுக்குத் தேவையான வாசனைத்திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

விலாஸம்:—
எச். சி. சந்திரா & கம்பெனி,
பெங்களூர் சிட்டி,
(Q. 61) (இந்தியா).

யாழ்ப்பாணம் இரகுநாதையர்,

குரோதன ௵ வாக்கியபஞ்சாங்கம்.

உலகப் பிரசித்தி பெற்றதும், சகலராலும் கைக்கொள்ளப்படுவதும் 68 ௵ கால அநுபவமுடையதுமான பஞ்சாங்கம் இதுவே. இதன் விலை சதம் 30. (அணா 5.)

6 பிரதி ரூபா 1-56 12 பிரதி ரூபா 3-12. 100 பிரதி ரூபா 25-00 வெளியூரவர் (இந்தியா இலங்கை)களுக்கு 12-க்குமேல தபாற்செலவு இனாம். 12-க்குமேல் எடுப்பவர்களுக்கு குரோதன ௵ தமிழ் இங்கிலீஸ் தேதிகளுள்ளதும் விசேட காலங்கள் குறிக்கப்பட்டதுமான அழகிய காலண்டர்1 இனாம். 100 காலண்டர் ரூபா 4.

தனிப்பஞ்சாங்கம் வேண்டுவோர் 36 சதத்துக்கும், காலண்டருக்கு 9 சதத்துக்கு முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். 6 சத முத்திரை அனுப்பினால் விரிவான புத்தகக் காட்லாக் இனாம்.

இ. சி. இரகுநாதையர்,
சோதிட்பரிபாலனமடம்,
(Q. 59.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.
(Y 39).

25-8-23ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

நமது ஜீ. ஏ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை" ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனாமாய் (1) அனுப்பப்படும்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.

அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை ஒரு முறை பரீக்ஷை பாருங்கள் வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரீக்ஷை பார்க்கலாம்! இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை. பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ. 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20-பில்ஸ் ரூ. 2-0-0 வி. பி சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணபடவில்லை. தங்கள் ஜீ. ஏ. மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம். வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி யருந்தித் தேகத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்ட் கொடுக்கப்படும்).

பிரமேக நிவர்ரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை; நீர்க்கடுப்பு, எரிச்சல், குத்து உடனே தீர்க்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் கு. மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

புஷ்பிக ரோஸ் பற்பொடி.

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, ஈகிர்சரவு, ஈகிர் வீக்கம், புழுக்குடைச்சல் முதலிய வியாதிகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாக்கெட் 1-க்கு ரூபா 2-0-0 வியாபாரிகளுக்கு 6-டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல் நலக்குவதற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேண்டுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அந்தக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலபந்தம், சரீரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப கோய் சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2.

மாந்திரீக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீங்கும். ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2-ம் சேர்த்து முற்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.
Q. 56. A.)

சேலம் ஜவுளி தினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பலமாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிரைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.
(H 32)

பீஜபூரந்த்

பீ-பஞ்ச சுகத்திந்த திவ்விய ஔஷதம்!
2 மணிநேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப்போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணி நேரத்திற்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும் இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் கரப்யாஸத்தினாலுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். கடிதங்கள் ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஆர்ய வைத்தியாஸ்ரமம்,
13. (H) பைராகிமடம் கோவில்வீதி,
(Y. 33) ஜி. டி. மதராஸ்.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியததைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
(M. 36.) சிலோன்.

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.